Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | CC 184/2023 |
| Deposition of witness for | :: | PW.9 |
| Name | :: | பார்த்திபன் (காவல் ஆய்வாளர்) |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2024

---

எதிரி ஆஜர்.

01.10.2024

முதல் விசாரணை:

1. நான் தற்போது தேனி மாவட்டம் கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.01.2023ம் தேதி பந்தல்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு. முத்துராஜ் அவர்களால் பதிவு செய்யப்பட்ட குற்ற எண். 9/2023 பிரிவுகள் 279, 304A வழக்கு கோப்பினை அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்து கொண்டேன்.

2. பின்னர் அன்றைய தினம் மதியம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை சென்று இறந்துபோன நாகரத்தினம் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முத்துமாரி, பிரின்சிகாவேணி ஆகியோர் முன்னிலையில் மதியம் 2.15 மணி முதல் மாலை 04.00 மணி வரை பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் இறப்பிற்கான உண்மை காரணம் அறியும் பொருட்டு இறந்துபோன நாகரத்தினம் என்பவரின் பிரேதத்தை பிரேத

பரிசோதனைக்காக பந்தல்குடி காவல் நிலைய தலைமை காவலர் 1015 திரு. கதிர்வேல் என்பவர் மூலம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவருக்கு தக்க வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி வைத்தேன். பின்பு பிரேத பரிசோதனை முடிந்து பிரேதத்தை அவரது உறவினர்களிடம் நல்லடக்கம் செய்வதற்காக ஒப்படைத்தேன்.

4. பின்னர் அன்றைய தினம் மாலை 04.30 மணிக்கு சம்பவ இடமான தூத்துக்குடி மதுரை நான்கு வழிச்சாலை இராமநாயக்கன்பட்டி விலக்கு அருகே சென்று சாட்சிகள் காளிமுத்துராஜ், சௌந்திரபாண்டியன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(பார்வைமகஜர் அ.சா.ஆ.9 ஆகவும் மாதிரி வரைபடம் ஆ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

5. பின்னர் அன்றைய தினம் மாலை 05.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடத்தில் விபத்தில் உடைந்து நிலையில் சிறு சிறு துண்டுகளாக கிடந்த N 92 B 77 என்ற வெள்ளை நிற கருப்பு பார்டர் போட்ட பைபர் நம்பர் பிளேட்டை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(அத்தாட்சி அ.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6. பின்னர் இவ்வழக்கின் புகார்தாரர் முத்துமாரி, சாட்சிகள் பிரின்சிகாவேணி, சந்திரசேகரன், டாக்டர் கணேஷ், பால்பாண்டி, பாலகிருஷ்ணன் மற்றும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சி சாட்சிகளான காளிமுத்துராஜ், சௌந்திரபாண்டியன், பிரேத பரிசோதனைக்கு உதவியாக இருந்த தலைமை காவலர் கதிர்வேல் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் முத்துராஜ் ஆகியோர்கனை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

7. பின்னர் 30.01.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட உடைந்த நிலையில் இருந்த நம்பர் பிளேட்டுடன் தூத்துக்குடி டோல்கேட் சென்று மதுரை நோக்கி சென்ற வெள்ளை நிற கார்களின் சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்ததில் TN 92 B 7799 என்ற வெள்ளை நிற மாருதி சுசுகி பிரிஜா கார் தூத்துக்குடியில் இருந்து மதுரை நோக்கி சென்றபடியால் மேற்படி காரின் நம்பரும் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட நம்பர் பிளேட்டுடன் ஒத்து போனதாலும் மேற்படி காரின் உரிமையாளரை இணையத்தில் ஆய்வு செய்ததில் பாலகிருஷ்ணன் த/பெ கொடிவேல் , ஆவரையூர் , தூத்துக்குடி மாவட்டம் என்பதும் அவர் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தவர் என்பதும் தெரிய வந்தது.

8. மேற்படி காரை வெங்கட்ராமன் என்பவர் மதுரை நோக்கி ஓட்டி சென்றதாகவும் மேற்படி காரானது இராமநாயக்கன்பட்டி விலக்கு அருகே சென்றபோது முன்னால் சென்று கொண்டிருந்த TN 67 BX 6183 என்ற இருசக்கர வாகனத்தில் இடித்து விபத்து ஏற்படுத்தியுள்ளது என்பது எனது விசாரணையில் தெரிய வந்தது.

9. பின்னர் 31.01.2023 ம் தேதி சாட்சி மீனாட்சிசுந்தரம் என்பவரையும் உடைந்த காரின் உடைந்த பாகங்களை பார்வையிட்டு ஜாப் கார்டு வழங்கிய மதுரை சிவா மாருதி நிறுவனத்தில் மெக்கானிக்காக பணிபுரிந்த யோகராஜ் என்பவரையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ( **மதுரை சிவா மாருதி நிறுவனம் வழங்கிய ஜாப் கார்டு அசாஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

10. பின்னர் 05.02.2023 ம் தேதி இவ்வாகன விபத்தில் இறந்துபோன நாகரத்தினம் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் சோமமூர்த்திநாகராஜன் அவர்களை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **(பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

10. பின்னர் 14.02.2023 ம் தேதி சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான கவிதா, சுதா, வசந்தா ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினம் மாலை 5 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரி வெங்கட்ராமன் என்பவரை காரணம் கூறி கைது செய்து குற்றமானது பிணையில் விடக்கூடிய குற்றம் என்பதால் தக்க இரு நபர்கள் பிணையத்தில் நிலைய பிணையில் விடுவித்தேன்.

11. பின்னர் 20.02.2023 ம் தேதி எதிரி ஓட்டி வந்த TN 92 B 7799 என்ற பதிவெண் கொண்ட காரை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன்.( TN 92 B 7799 **என்ற பதிவெண் கொண்ட காரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

12. பின்னர் 07.03.2023 ம் தேதி இவ்வழக்கில் இறந்த நாகரத்தினம் ஓட்டி வந்த TN 67 BX 6183 என்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. கண்ணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ( **TN 67 BX 6183 என்ற இருசக்கர வாகன மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

13. பின்னர் 22.06.2023 ம் தேதி இவ்வழக்கின் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பிஆர் எண். 112/2023 பெற்றேன். **(படிவம் 91 அசாஆ.16 ஆகவும்,**

**உடைந்த நம்பர் பிளேட்டின் உடைந்த துண்டுகள்– 6 அசாபொ. 1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது )**

14. பின்னர் அன்றைய தினம் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரி வெங்கட்ராமன் என்பவருக்கு எதிராக பிரிவுகள் 279, 304A இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. அசா.1 முத்துமாரி புகார்தாரர் சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சி இல்லை என்றால் ஆமாம். புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் வண்டியின் நம்பர் மற்றும் எதிரியின் பெயர் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் அடையாளம் தெரியாத வாகனம் மோதியதால் அதை குறிப்பிடவில்லை. நான் சொன்னவாறு சம்பவத்தை நேரடியாக பார்த்தாக சொல்லப்பட்ட ப.சா. 5 முதல் ப.சா.9 வரையிலானவர்களை நான் முறையாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. அசா.1 இறந்துபோன நபரின் மனைவி என்றால் ஆமாம். அசா.2 இறந்தவரின் மகள், அசா.3 சந்திரசேகரன், அசா.4 கணேஷ் ஆகியோர் இறந்துபோனவருடன் பணி செய்தவர்கள் என்றால் ஆமாம். அசா.7 காளிமுத்துராஜ், அசா.8 சௌந்திரபாண்டியன் முன்னிலையில் நான் சம்பவ இடத்தை பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்திற்கு அருகில் உள்ள நிலத்தின் உரிமையாளர்கள் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் காலியான விவசாய மனை என்பதால் விசாரணை செய்யவில்லை.

3. ப.சா.12, பசா.13 ஆகியோரை நான் வழக்கிற்காக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(வழக்கு ஆவணங்கள் சாட்சியம் ஆகியவற்றை நீதிமன்றம் பார்வையிடுகையில் பசா.12, பசா.13, பசா.16, பசா.17 ஆகியோர்கள் முக்கியமான சாட்சிகளாக கருதப்படுவதால் அவர்களை விசாரித்து விட்டு விசாரணை அதிகாரியை குறுக்கு விசாரணை செய்தால் நீதியின்பால் நலம் என்று கருதப்படுவதால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**